செ.வெ.எண்:52/ஜனவரி நாள்:30.01.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை

## மாவட்ட ஆட்சித தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் இன்று (30.01.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளான இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடனை ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். வாக்கு எண்ணும் மையத்தில், தேர்தல் வாக்குப்பதிவு முடிந்த பின்னர், சட்டமன்ற தொகுதிகள் வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான அறைகள், வாக்குப்பதிவு எண்ணும் அறைகள், பத்திரிக்கை மற்றும் செய்தியாளர்களுக்கான தகவல் அறை என அனைத்து அறைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், வாக்கு எண்ணும் பகுதிகளில் பாதுகாப்பினை மேம்படுத்திடும் வகையில் தேவையான பேரிகார்டு தடுப்புகள் அமைத்திடவும், தேவையான இடங்களில் சி.சி.டிவி கேமராக்களைப் பொருத்தி கண்காத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.சித்திரைவேல், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராம்பிரதீபன், பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரு.குருதிவேல்மாறன், தேர்தல் வட்டாட்சியர் திருமதி.ஜெயமணி, இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**